காஞ்சிபுரம் மத்தியகூட்டுறவு வங்கிலிமிடெட்,
எண்.15-ஜி, சேக்குப்பேட்டைவடக்குத் தெரு, காஞ்சிபுரம்–631 501.
தொலைபேசி: 27222296, 27222297;தொலைநகல்: 27222064
மின் அஞ்சல்: kpmccb@kccb.co.in

ந.க.5938/2021-22/ கணினி பிரிவு

நாள்: 29.04.2022

## சுற்றறிக்கை

பொருள் : காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி - தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு QR Code பணப்பரிவர்த்தனை தீர்வை நடைமுறைப்படுத்துதல் - தொடர்பாக.

பார்வை :

1) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கடிதம் ந.க.எண்.49657/2021CBP1, நாள்:02.12.2021.
2) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கடிதம் ந.க.எண். 49657/2021CBP1, நாள்:20.12.2021.
3) தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி கடிதம் C.No. 9028/ ITD/ 2021-22 , நாள்:27.12.2021
4) தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி கடிதம் C.No. 13438/ ITD-INSTA/2022-23 , நாள்:04.04.2022
5) தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி கடிதம் C.No. 13438/ ITD-INSTA/2022-23 , நாள்:18.04.2022
6) வங்கி மேலாண்மை இயக்குநர் அவர்களின் 29.01.2022 & 27.04.2022 தேதிய சுற்றறிக்கை.

*****

பார்வை (1) ல் காணும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதத்தில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் QR code நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை (2) ல் காணும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதத்தில், மேற்படி QR code நடைமுறைப்படுத்த வர்த்தக விவரம் தெரிவிக்க தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

பார்வை (3) ல் காணும் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி கடிதத்தில், மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் QR code-ஐ AGS Transact Technologies Ltd., நிறுவனத்தின் மூலம் நடைமுறைப்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (4) ல் காணும் கடிதத்தில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், வணிக நடவடிக்கைகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கும் QR Code சேவைக்கான பணப்பரிவர்தனை தீர்வை செயல்படுத்துமாறு, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியால், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக, உர விற்பனை செய்யும் சங்கங்களுக்கும் QR Code சேவை மூலம் உரக்கொள்முதல் செய்த பணத்தை சங்கத்திற்கு செலுத்த ஏதுவாக அனைத்து சங்கங்களிலும் இதனை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. பின்வரும் காலங்களில் இத்திட்டம் மூலம் உர கொள்முதல் தவிர இதர வெவ்வேறு காரியங்களுக்கும் விவசாயிகள் மற்றும் பயனாளிகளிடமிருந்து சங்கத்திற்கு நிதிமாற்றம் செய்ய வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளது. பார்வை (5) ல் காணும் கடிதத்தில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் QR Code பணப்பரிவர்தனை தீர்வுக்கான சேவையை செயல்படுத்த காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் மத்திய கூட்டுறவு வங்கிகள் செயல்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பார்வை (6) ல் காணும் வங்கி மேலாண்மை இயக்குநர் அவர்களின் 29.01.2022 & 27.04.2022 தேதிய சுற்றறிக்கைகளின் படி, அனைத்து தொவேகூ.கடன் சங்கங்கள், பொது விநியோக திட்ட (PDS) கடைகள், கூட்டுறவு பண்டகசாலைகள், மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களுக்கு QR Code சேவையை நடைமுறைப்படுத்தி செயல்படுத்துவது தொடர்பான விண்ணப்பப்படிவம் மற்றும் ஒப்பந்தப்படிவம் ஆகியவற்றை பூர்த்தி செய்து அனுப்பி வைக்க தெரிவித்துள்ளதை கள மேலாளர்கள், சரக மேற்பார்வையாளர்கள் மற்றும் கிளைமேலாளர்களுக்கு தொடர்புறுத்தப்படுகிறது

மேற்படி அனைத்து தொவேகூ.கடன் சங்கங்கள், கூட்டுறவு பண்டகசாலைகள், பொது விநியோக திட்ட (PDS) கடைகள், மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களுக்கு QR Code சேவையை நடைமுறைப்படுத்திவதில் காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்க, தனிப்பட்ட கவனம் செலுத்தி விண்ணப்பப்படிவம் மற்றும் ஒப்பந்தப்படிவம் ஆகியவற்றை பூர்த்தி செய்து அனுப்பி வைக்கப்படுவதை விரைவுபடுத்த கள மேலாளர்கள், சரக மேற்பார்வையாளர்கள் மற்றும் கிளை மேலாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்). மு. முருகன்
கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர்

29/4/2022
மேலாண்மை இயக்குநருக்காக
29/4/2022

**பெறுநர்**
தலைவர் மற்றும் செயலாளர்,
அனைத்து தொவேகூ.கடன் சங்கங்கள்/பண்டகசாலைகள் / மொத்த விற்பனை பண்டகசாலைகள்

**நகல்**
1) மண்டல இணைப்பதிவாளர் - காஞ்சிபுரம், திருவள்ளூர்
2) சரக துணைப்பதிவாளர் - காஞ்சிபுரம், திருவள்ளூர்,செங்கல்பட்டு, மதுராந்தகம், திருத்தணி மற்றும் பொன்னேரி
3) அனைத்து கிளை மேலாளர்கள்
4) அனைத்து கள மேலாளர்கள் /சரக மேற்பார்வையாளர்கள்
5) அனைத்து உதவிப் பொதுமேலாளர்கள்
6) பொதுமேலாளர்
7) முதன்மைவருவாய் அலுவலர்
8) கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர்

} மேஜைக்கு